# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1426 / 34 – 2006 ජනවාරි 06 වැනි සිකුරාදා – 2006.01.06

*1426 / 34 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*( அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது )*


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை தொழில்நுட்பவியல் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பு

04/2000 ஆம் இலக்க 2000.01.26 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 09/2001 ஆம் இலக்க 2001.05.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மூலம் திருத்தம் செய்யப்பட்ட 1999.08.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1094/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை தொழில் நுட்பவியல் சேவைப் பிரமாணக் குறிப்பிற்குப் பதிலீடாக பின்வரும் பிரமாணக் குறிப்பு வெளியிடப்படுகின்றது.

டி. திசாநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2005 திசம்பர் 23 ஆம் திகதி.

**1. நடைமுறைக்கு வரும் திகதி**

1.1 தாபனப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களின்படி மேற்கொள்ளப்பட்டதாக கருதப்படுகின்றதும் இனிவருங்காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான ஏதேனும் நடவடிக்கையை பாதியாதவாறு இப் பிரமாணக் குறிப்பு 2005.03.01 திகதி முதல் நடைமுறைப்படும். நடைமுறையிலுள்ள ஆட்சேர்ப்புத் திட்டங்களும் பதவி உயர்வு முறைகளும் இந்தத் திகதி தொடக்கம் நடைமுறைப்பட மாட்டாது.

1.2 உள்ளடங்கும் சேவைகள்

விஞ்ஞானக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்ததும் செய்முறைப்பாடுகளுடன் தொடர்பான தொழில்நுட்ப அறிவியல் பற்றிய பயிற்சி பெற வேண்டியதுமான அனைத்துச் சேவைகளும் இலங்கை தொழில் நுட்பவியல் சேவையில் உள்ளடங்கும்.

பகுதித் தொழில்சார் தகைமைகளை அடைவதற்குத் தேவையான ஆகக் குறைந்த கல்வித் தகைமைகளைக் கொண்டுள்ளதும் பயிற்சி மற்றும் அனுபவத்தின் பேரில் முகாமை மட்டத்தை அடையக் கூடியதுமான முகாமைச் சேவைகளாகிய பொறியியல் விஞ்ஞான கமத்தொழில் மற்றும் பண்ணை உற்பத்தி போன்ற தொழில்சார் சேவைகளுக்கு குறைநிரப்பு சேவைகளாக இருக்கும்.

**2. வரைவிலக்கணம்**

" பிரமாணக் குறிப்பு " என்ற பதம் இலங்கை தொழில்நுட்பவியல் சேவைப் பிரமாணக் குறிப்பு எனப் பொருள்படும்.

" செயலாளர் " என்ற பதம் அரசாங்க நிர்வாகம் எனும் விடயம் எந்த அமைச்சுக்கு குறித்தொக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்.

" சேவை " என்ற பதம் இலங்கை தொழில்நுட்பவியல் சேவை எனப் பொருள்படும்.

" சபை " என்ற பதம் இலங்கை தொழில்நுட்பவியல் சேவைச் சபை எனப் பொருள்படும்.

" அ.சே.ஆ. செயலாளர் " என்ற பதம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எனப் பொருள்படும்.

" வர்த்தமானப் பத்திரிகை " என்ற பதம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை எனப் பொருள்படும்.

" திருப்திகரமான சேவைக்காலம் " எனக் கருதப்படுவது பதவி உயர்வுத் திகதிக்கு உடன் முந்திய 05 வருட காலத்திற்குள் எச்சரிக்கை தவிர்ந்த வேறு ஒழுக்காற்று தண்டனைகள் எதற்கும் ஆளாகாத சேவைக்காலமாகும்.

### 3. இலங்கை தொழில் நுட்பவியல் சேவைச் சபை

3.1அரசாங்க நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் 03 வருட பதவிக்காலம் என்ற வரையறைக்கு உட்படுத்தப்பட்டு நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்கள் 07 பேரைக் கொண்ட இலங்கை தொழில்நுட்பவியல் சேவைச் சபை என்ற பெயரிலான சபையொன்றை ஸ்தாபித்தல் வேண்டும். அரசாங்க நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரால் பெயரிடப்படும் அலுவலரொருவர் இச் சபையின் தலைவராதல் வேண்டும். அரசாங்க நிர்வாக அமைச்சின் தாபனப் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரினால் பெயரிடப்படும் அலுவலர் ஒருவரும் பொறியியல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துறையில் அனுபவம் வாய்ந்த 03 நபர்களும் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற சிரேஷ்ட அலுவலர்கள் இருவரும் ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

அரசாங்க நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரால் சபைக்காக நிர்வாகச் செயலாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும்.

சபையின் பூர்வாங்க அனுமதியை பெறாமல் சபையின் தொடர் கூட்டங்கள் 03 க்கு வருகைதராத பதவி முறையினால் நியமனமாகாத உறுப்பினர் ஒருவர் அந்த 03 ஆம் கூட்டத் திகதியிலிருந்து நடைமுறைப்படும் வண்ணம் பதவியை வெறிதாக்கிச் சென்றதாக கருதப்படுவர்.

3.2 அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அளிக்கப்படுகின்ற அதிகாரங்களின் கீழ் பின்வரும் அலுவல்களை முகாமை செய்வது பற்றிய அதிகாரமும் பொறுப்பும் சபையைச் சார்ந்திருக்கும்.

(அ) இலங்கை தொழில்நுட்பவியல் சேவை பிரமாணக் குறிப்பிற்கு ஏற்ப அந்தந்த திணைக்களங்களில் தேவைகளின் படி புதிய அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக பொதுப் போட்டிப் பரீட்சையொன்றை நடாத்துதல் இருக்கின்ற போட்டிப் பரீட்சைகளைக் கண்காணித்தல்.

(ஆ) இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் சகல ஆட்சேர்ப்புகள் மற்றும் தரமுயர்வுகளுக்கேற்ப தரவு வங்கியொன்றை நடத்திச் செல்லுதல்.

(இ) புதிய அலுவலர்களை பயிற்றுவிப்பதற்காக ஒவ்வொரு திணைக்களத்திலும் நிறுவனத்திலும் பயிற்றுவிக்கும் அலுவலர்களை கண்காணித்தலும் அத்துடன் சகல திணைக்களத்திலும் / நிறுவனத்திலும் ஒரே சமமான தரத்துடன் கூடிய பயிற்சியளிக்கும் முறையினை நடாத்தி செல்வதற்கு தேவையான ஒழுங்குகளைச் செய்தல்.

(ஈ) இலங்கை தொழில்நுட்பச் சேவையில் முதலாம் இரண்டாம் வினைத்திரமைகாண் தடைப்பரீட்சைகள் இரண்டும் 1 ஆம் வகுப்பு முதல் விசேட வகுப்புக்குத் தரமுயர்த்துவதற்கான பரீட்சையும் வருடாந்த பரீட்சைத் தினைக்களத்தினால் நடாத்தப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.

(உ) இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விசேட வகுப்பின் பதவிகளை ஏற்படுத்துவதற்குரிய அளவிடும் காரணிகளை உருவாக்குதலும் அதற்கு ஏற்புடையதான பரிந்துரைகளை முன்வைத்தலும்.

(ஊ) இப் பிரமாணக் குறிப்பில் " இ " அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளைத் தவிர புதிதாக ஏற்படுத்தப்படும் பதவிகளை சேவையில் உள்ளடக்குவதற்கான வேண்டுகோள்களை கவனத்திற் கொண்டு பார்த்தலும் " இ " அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளைத் தேவையான சந்தர்ப்பங்களில் சேவையிலிருந்து நீக்குவது தொடர்பாக தீர்மானம் எடுத்தலும்.

(எ) நாடளாவிய சேவையில் ஒரே மாதிரியான வடிவத்தை நடாத்தி செல்வதற்காக உரிய நடவடிக்கை எடுத்தல்.

### 4. சம்பள அளவுத்திட்ட அமைவு

பயிற்சி அளிக்கப்படும் தரத்திலிருந்து வகுப்பு 1 வரை பதவியணி விகிதாசாரம் இராததுடன் மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு திணைக்களத்தினதும் தேவைக்கேற்பவே தீர்மானிக்கப்படும். பின் குறிப்பிடப்படும் சம்பள அளவுத் திட்டங்கள் 2004.01.01 ஆந் திகதி முதல் நடைமுறையில் இருக்கும்.

| | |
|---|---|
| விசேட வகுப்பு | ரூபா 1,07,580 - 16 X 2,460 - 1,46,940 |
| வகுப்பு I | ரூபா 89,160 - 13 X 1,560 - 6 X 2,460 - 1,24,200 |
| வகுப்பு II பிரிவு "அ" | ரூபா 76,320 - 1 X 1,320 - 13 X 1,560 - 97,920 |
| வகுப்பு II பிரிவு "ஆ" | ரூபா 69,480 - 7 X 1,320 - 10 X 1,560 - 94,320 |
| பயிற்சியளிப்புத் தரம் | ரூபா 66,840 - 1 X 1,320 - 68,160 |

இச் சம்பள அளவுத் திட்டங்கள் அரசினால் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு கீழ்ப்பட்டிருக்கும்.

***5. ஒவ்வொரு வகுப்பினதும் பதவி எண்ணிக்கை***

*விசேட வகுப்பில் இருக்க வேண்டிய பதவியணிகளின் எண்ணிக்கை சேவையின் தேவைகளுக்கேற்ப இப் பிரமாணக் குறிப்பின் 3 : 2 (இ) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமையவும் தாபன விதிக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழும் தொழிநுட்பவியல் சேவைச் சபையினால் பரிந்துரைக்கப்படும் வகுப்பு 11 "ஆ" பிரிவிலிருந்து வகுப்பு 1 வரை பதவியணி விகிதாசாரம் இருத்தலாகாது என்பதுடன் அலுவல்கள் பதவி உயர்வுகளைப் பெறும் விகிதத்தின் படி திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்தப் பதவி எண்ணிக்கைக்கு மேற்படாதவாறு தரங்கள் அமைவு தீர்மானிக்கப்படும்.*

***6. ஆட்சேர்ப்பு***

*6.1 ஆட்சேர்ப்புக்கள் யாவும் இடையிடையே வெளியிடப்படுகின்ற அரசாங்க நிர்வாக சுற்றிறிக்கைகளினதும் தாபன விதிக் கோவவைகளினதும் விதிப்புக்களுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். நிரந்தர பதவி நியமனங்களுக்காக இப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனுமொரு பதவிக்காக விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குவதன் மூலம் ஆட்சேர்ப்புத் திட்டங்களை அங்கீகரித்தல் தாபனப் பணிப்பாளர் நாயகத்தினால் செய்யப்படும். அதன்படி சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் திணைக்களங்களின் தலைவர்கள் ஆட்சேர்ப்புக்களைச் செய்ய வேண்டும்.*

*6.2 அ. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் வகுப்பான வகுப்பு II "ஆ" பிரிவில் உள்ள வெற்றிட எண்ணிக்கையில் 70% வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான திறந்த போட்டிப் பரீட்சை மூலமாகவும் 30% தகைமைகளைக் கொண்டுள்ள திணைக்கள ஊழியர்களிலிருந்தும் நிரப்பப்படும்.*

*ஆ. ஆயினும் பிரமாணக் குறிப்பின் 6.3.1 (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளையும் 6.3.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளையும் கொண்டுள்ள உள்ளக விண்ணப்பதாரர்கள் திணைக் களத்தினுள் இராவிட்டால் மட்டும் மீதி அளவினை திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யும் வெளிவாரி விண்ணப்பதாரிகளிலிருந்து பூர்த்தி செய்து கொள்ளலாம்.*

***குறிப்பு :***

*ஆயினும் போதியளவு உள்ளக விண்ணப்பதாரர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் மேற்படி (அ) மற்றும் (ஆ) பந்திகளில் உள்ளக விண்ணப்பதாரர்களில் இருந்து பூர்த்தி செய்வதற்குள்ள வெற்றிட எண்ணிக்கையும் வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கப்படும்.*

***6.3 ஆட்சேரப்புத் தகைமைகள்***

***6.3.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு***

*அ. பயிற்சியளிப்புத் தரத்திற்குச் சேர்த்துக்கொள்வதற்கான அடிப்படைக் கல்வித் தகைமைகளாக இத்துறைக்கு ஏற்புடைய இரண்டு பாடங்கள் அடங்கலாக 03 விஞ்ஞானப் பாடங்களில் க. பொ. த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தலும் அத்துடன் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருத்தல்.*

*அல்லது,*

*ஆ. மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளுடன் கூடிய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் இத்துறைக்கு ஏற்புடையதான தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (3 வருட பகுதி நேரப் பயிற்சி பாடநெறி) அல்லது*

*படவரைவியல் தொடர்பாக ஒரு வருட முழு நேரகால பயிற்சி பாடநெறியை திருப்திகரமாக பூர்த்தி செய்து ஏற்புடைய சான்றிதழைப் பெற்றிருத்தல்.*

***குறிப்பு :***

*திறந்த போட்டிப் பரீட்சையில் தொழில்நுட்பவியல் சேவையினை பயிற்சியளிக்கும் தரத்திற்கு தகைமை பெறுகின்ற அதாவது,*

*(i) 6 : 3 : 1 (அ) பந்தியில் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள், சேவையுடன் தொடர்பான பாடத்திட்டத்தின்படி அடைகின்ற இரண்டு வருடகால கோட்பாட்டு முறையானதும், செய்முறை ரீதியிலானதுமான பயிற்சியை திருப்திகரமாக முடித்து சம்பந்தப்பட்ட பரீட்சையை சித்தியடைந்த பின் வகுப்பு II "ஆ" தொகுதியின் சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.*

*(ii) 6 : 3 : 1 (ஆ) பந்தியில் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள், சேவையுடன் தொடர்பான பாடத்திட்டத்தின்படி பெறப்படுகின்ற ஒரு வருடகால கோட்பாட்டுமுறையானதும், செய்முறை ரீதியானதுமான பயிற்சியை திருப்திகரமாக முடித்து சம்பந்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தபின் வகுப்பு II "ஆ" தொகுதியின் சம்பள அளவுத் திட்டத்தில் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.*

(iii) இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட பயிற்சி தேவைப்படும் ஏதேனும் விசேட சேவைகள் இருந்தால் அந்த மேலதிக பயிற்சிக் காலப்பகுதிக்கு காட்டும் கவனிப்பாக மேலதிகமாகப் பயிற்சி பெறும் ஒரு வருடத்திற்கு ஒரு சம்பள ஏற்றம் வீதம் வழங்குவதன் அடிப்படையில் பயிற்சி முடிவில் வகுப்பு II "ஆ" தொகுதிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவதுடன், மேலதிகமான பயிற்சி பெறும் காலப்பகுதி வகுப்பு II "அ" தொகுதிக்குத் தரமுயரத்துவதற்காகக் கவனிக்கப்படும் காலப்பகுதிக்காக கணக்கெடுக்கப்படும்.

(iv) மேற்படி i மற்றும் ii இன் கீழான பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்கள் இருப்பார்களாயின், அவர்களுக்கு 06 மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு தமது பயிற்சி காலத்தினை நீடித்துக் கொள்ளச் சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறு நீடிக்கப்படும் காலஇறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்திபெறத் தவறும் பயிலுநர்களின் சேவை இடைநிறுத்தப்படும்.

(இ) ஆட்சேர்ப்புச் செய்யும் தரமான வகுப்பு II "ஆ" தொகுதிக்கு உட்சேரத்துக்கொள்வதற்காக மேற்படி (அ) வில் குறிப்பிட்டுள்ளஅடிப்படைக் கல்வித் தகைமைகளுடன் பின் குறிப்பிடப்படும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றை விண்ணப்பதாரர்களினால் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா
அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா
அல்லது

(iii) கல்வி, உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா
அல்லது

(iv) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் இரண்டு வருடகால கமத்தொழில் டிப்ளோமா
அல்லது

(v) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா
அல்லது

(vi) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாம் பகுதியை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்
அல்லது

(vii) உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்படி தொழில்நுட்ப சான்றிதழ்கள் வழங்கப்பட்ட நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களை கருத்துரைகளை அறிந்துகொண்ட பின்பு மேற்படி தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதென இலங்கைத் தொழில்நுட்பவியல் சபையினால் ஏற்றுக் கொள்ளப்படும் வேறு தொழில்நுட்பத் தகைமைகளை பெற்றிருத்தல்.

**6.3.2 உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு**

க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்று, சம்பந்தப்பட்ட துறையில் 10 வருடகால அனுபவத்தைப் பெற்றுள்ளதும் 6:3:1 (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தெழில்நுட்ப தகைமைகளுடன் தொடர்புடைய துறையில் 05 வருடகால அனுபவத்தைப் பெற்றுள்ள திணைக்கள ஊழியர்கள் திணைக்களப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் பேரில் தெரிவு செய்து பயிற்சியளிப்புத் தரத்திற்கு சேர்க்கப்படுவோர்கள் குறைந்தபட்சம் பயிற்றப்பட்ட தொழில்நுட்பத் தரங்களில் வகுப்பு I தரம் II இல் 05 வருடங்கள் திருப்திகரமாக சேவையாற்றியவர்களில் இருந்தே இதற்கான தெரிவுகள் செய்யப்படும்.

**குறிப்பு :-**

(i) புகையிரத திணைக்களத்தின் ஊழியர்களுக்காக தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள சதவீதங்களில் (உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக 30%, வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்காக 70% களினதும்) உச்ச எல்லையின் கீழ் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் தொழில்சார் போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி பயிற்சியளிப்புத் தரத்திற் சேர்க்கப்படுவர்.

(ii) திணைக்கள ஊழியர்களின் 6.3.1 (இ) இல் குறிப்பிட்டுள்ள தகைமைகளுடன் திணைக்கள பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் பேரில் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு II "ஆ" தொகுதிக்கு உட்சேர்க்கப்படுவர்.

(iii) திணைக்கள ஊழியர்களில் திணைக்களப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் பேரில் பயிற்சியளிப்புத் தரத்திற்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிக் காலத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்தபின் திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்ததும் இ.தொ.சே. வகுப்பு II "ஆ" பிரிவுக்கு உட்சேர்க்கப்படுவர்.

(iv) இவ் அலுவலர்கள் பயிற்சியளிக்கும் தரத்தின் போது தாம் முன்னிருந்த சம்பள அளவுத்திட்டத்திலேயே தொடர்ந்தும் இருக்க வேண்டுமென்பதுடன், பயிற்சிநெறி முடிவில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்திபெறும் வரை இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின்ஆட்சேர்ப்புத் தரத்தின் ஆரம்ப சம்பள ஏற்றத்திற்குச் சமமான ஒரு ஆண்டுப்படி சம்பளத்திற்கு மேலதிகமாக அவர்களுக்கு வழங்கப்படும். பயிற்சித் தரத்தில் திருப்திகரமாக இருக்கும் அலுவலர் ஒருவர் இரண்டாவது ஆண்டில் தான் இற்றைவரைக்கும் இருந்த சம்பள அளவுத் திட்டத்தின் உயர் சம்பளப்படிநிலையில் அமர்த்தப்படுவதுடன் தொடர்ந்தும் படி வழங்கப்படும். பரீட்சையை திருப்திகரமாக முடித்ததும் 2000.03.02 ஆந் திகதிய 07/2000 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் மாற்றியமைக்கப்படும்.

(v) இரண்டு வருடங்களுக்குக் கூடிய பயிற்சி தேவைப்படும் ஏதேனும் விசேட சேவைகள் இருப்பின் அந்த மேலதிக சேவைக்கு காட்டும் கவனிப்பாக மேலதிகமாக பயிற்றப்பட்ட ஒரு வருடத்திற்கு ஒரு சம்பள ஏற்றம் வீதம் வழங்கும் அடிப்படையில் பயிற்சி முடிவில் வகுப்பு 11 "ஆ" பிரிவுக்கு சேர்த்துக் கொள்ளப்படுவதுடன், மேலதிக பயிற்சிக் காலப்பகுதி வகுப்பு 11 "ஆ" பிரிவுக்கு தரமுயர்த்துவதற்காக கவனிக்கப்படும் காலப்பகுதிக்காக கணக்கெடுக்கப்படும்.

(vi) உரிய பயிற்சி முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி பெறத் தவறும் பயிலுநர்கள் இருப்பின் அவர்கள் 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு தமது பயிற்சிக் காலத்தை நீடித்துக் கொள்ளலாம். அவ்வாறு நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியின் முடிவில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி பெறத்தவறும் பயிலுநர்கள் மேலும் அவர்களின் முற்பட்ட பதவிகளுக்காக விடுவிக்கப்படுவர்.

*7. தரமுயர்வுத் திட்டம்*

**7.1 வகுப்பு II "ஆ" தொகுதியிலிருந்து வகுப்பு II "அ" தொகுதிக்கு :-**

(அ) வகுப்பு II "அ" பிரிவிலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடை சித்தியடைந்தவர்களும் வகுப்பு II "ஆ" தொகுதியில் 05 வருடங்கள் திருப்திகரமாக சேவையாற்றியுள்ளவர்களும் முதலாம் திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுமான அலுவலர்கள் வகுப்பு II "அ" தொகுதிக்கு தரமுயர்த்தப்படுவர்.

(ஆ) வகுப்பு II "ஆ" தொகுதியின் அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையை சித்தியடைந்த வகுப்பு II "ஆ" தொகுதியில் 12 வருட சேவைக்காலத்தைக் கொண்டதும் பதவி உயர்வு செய்யப்படும் திகதிக்கு உடன் முன்னரான 05 வருட திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ளதுமான அலுவலர்களை வகுப்பு II "ஆ" தொகுதிக்கு பதவி உயர்த்தப்படும்.

**7.2 வகுப்பு II "அ" தொகுதியிலிருந்து வகுப்பு I இற்கு :-**

(அ) வகுப்பு II "அ" தொகுதியின் அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையை சித்தியடைந்த வகுப்பு II இன் "அ" தொகுதியின் 04 வருட சேவைக்காலத்தைக் கொண்ட பதவி உயர்வுகள் செய்யப்படும் திகதிக்கு திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள இரண்டாம் திணைக்களத்துப் பரீட்சையை சித்தியடைந்த அலுவலர் வகுப்பு I இற்கு பதவி உயர்த்தப்படுவர்.

**7.3 வகுப்பு I இல் இருந்து விசேட வகுப்பு :-**

(அ) விசேட வகுப்பின் வெற்றிடங்களில் 40% வகுப்பு I இல் 04 வருட சேவைக்காலத்தை உள்ள தரமுயர்வுத் திகதியில் திருப்திகரமான சேவையுடைய அத்துடன் உரிய பரீட்சையில் சித்தியடைந்துள்ள அலுவலர்களிலிருந்து நிரப்பப்படும்.

(ஆ) விசேட வகுப்பிலுள்ள வெற்றிடங்களில் 60% வகுப்பு I இல் 06 வருடங்கள் திருப்திகரமாக சேவையாற்றியுள்ள தரமுயர்வு திகதிக்கு உடன் முந்திய ஐந்து வருடங்களுள் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களின் சேவை மூப்பையும் திறமையையும் அடிப்படையாகக் கொண்டு நிரப்பப்படும்.

(இ) விசேட வகுப்பின் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை 05 ஐ பார்க்க குறையுமாயின் மேலே (அ) மற்றும் (ஆ) உப பந்திகளில் காட்டப்பட்டுள்ள சதவீதங்கள் உரியனவாகாது.

அலுவர்களின் சேவை முதுமுறை மற்றும் திறமை அடிப்படையில் பதவி வெற்றிடங்களை நிரப்ப வேண்டும்.

(ஈ) விசேட வகுப்பின் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை 05 அல்லது அதைப் பார்க்க கூடினாலும் அந்த ஆண்டில் வெற்றிடமான பதவி எண்ணிக்கை 04 அல்லது அதைப் பார்க்க குறையுமாயின் தகைமை பெறுகின்ற அலுவலர்களின் சேவை முதுமுறை மற்றும் திறமை அடிப்படையிலேயே வெற்றிடங்களை நிரப்ப வேண்டும்.

(உ) விசேட வகுப்பின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆண்டுதோறும் நடாத்துகின்ற போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளை உரியதாகக் கொள்ளவேண்டியது அவ்வாண்டில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு மட்டுமாகும்.

(ஊ) மேலே (அ) மற்றும் (ஆ) உப பந்திகளின்படி வெற்றிடங்களை நிரப்பும் போது முதலாவதாக (ஆ) பந்தியின் கீழ் ஏற்படுகின்ற வெற்றிடங்களையும் இரண்டாவதாக (அ) பந்தியின் கீழ் ஏற்படும் வெற்றிடங்களையும் நிரப்ப வேண்டும்.

(எ) இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு I ஐ சேர்ந்த அலுவலர்களை விசேட தரத்திற்குத் தரமுயர்த்தும் போது திறமையை நிர்ணயிப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் தயாரித்த புள்ளி வழங்கல் திட்டத்தை உரிய ஆட்சேர்ப்புத் திட்டங்களில் உள்ளடக்க திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

***7.4 தொழில்சார் சேவைகளுக்கு செய்யப்படும் உயர்வுகள்***

(அ) திணைக்களங்களின் தொழில்சார் சேவைகளைச் சேர்ந்த பதவியணியில் ஏதேனுமொரு சதவீதம் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு 1 இலுள்ள அலுவலர்களில் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுபவர்களின் உயர்வுகளுக்காக ஒதுக்கப்படும்.

(ஆ) அத்தகைய பதவிஉயர்வு முறைகள் இல்லாத தொழில்நுட்பவியல் சேவையின் பதவிகளுக்காகவும் இம்முறையை விஸ்தரிக்க வேண்டும். அதற்காக 7.4 (அ) பிரிவில் குறிப்பிட்டுள்ள தொழில்கள் சேவைகளுக்கு

சமமான திணைக்களங்கள் சார்ந்த ஒரேயொரு பதவியையாவது ஏற்படுத்த திணைக்களத் தலைவர்கள் செயற்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

***8. திணைக்களப் பரீட்சைகளும் வினைத்திறன்காண் தடைகளும் : -***

***8.1 வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் : -***

(அ) இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு II "ஆ" பிரிவு மற்றும் வகுப்பு II "அ" பிரிவின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் பரீட்சை திணைக்களத்தால் நடாத்த வேண்டும். இதில் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் எனும் பாடங்கள் உள்ளடங்குகின்றன. எல்லா வினைத்திறன் காண் தடைகளும் எழுத்துப் பரீட்சைகள் ஆவதுடன் இப் பரீட்சைகளில் சித்தி பெறுவது கட்டாயமாகும்.

(ஆ) அலுவலரொருவர் தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு II "ஆ" பிரிவுக்கு நியமனம் செய்யப்பட்டபின் மூன்று ஆண்டுகளுக்குள் முதலாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலும் வகுப்பு II "அ" பிரிவுக்கு நியமனம் செய்யப்பட்ட பின்னரான மூன்று ஆண்டுகளுக்குள் இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையும் சித்தி பெறவேண்டும்.

(இ) சேவையின் வகுப்பு II "அ" பிரிவைச் சேர்ந்த அலுவலர்களைப் போன்று ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்து முதலாம் வினைத்திறன் காண்தடைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள வகுப்பு II "ஆ" பிரிவில் உள்ள அலுவலர்களும் இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கு தோற்றலாம்.

**குறிப்பு :** - (i) மேற்குறிப்பிட்டுள்ள வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகளுக்கு உரிய பாடங்களும் பாடவிதானமும் "அ" அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

(ii) மத்திய மட்டத்தின் தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் நடாத்தப்பட்ட முதலாம் இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளில் சித்தியெய்திய அலுவலர்கள் சேவையின் முதலாம் இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

(iii) மத்திய மட்டத்தின் தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் நடாத்தப்பட்ட இரண்டாம் திணைக்களப் பரீட்சையில் "தாபன விதிக்கோவை" பாடத்தில் சித்தியெய்திய அலுவலர்கள் சேவையின் வகுப்பு II "அ" பிரிவிற்கு உரிய இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் "அலுலக நிர்வாகம் மற்றும் தாபன விதிக்கோவை" எனும் பாடத்தில் சித்திபெற வேண்டிய தேவையில் இருந்து விலக்களிக்கப்படுவர்.

(iv) மத்திய மட்டத்தின் தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் நடாத்தப்பட்ட இரண்டாம் திணைக்களப் பரீட்சையில் "நிதி ஒழுங்கு" பாடத்தில் சித்தியெய்திய அலுவலர்கள் சேவையின் வகுப்பு II "அ" பிரிவுக்குரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் "நிதி ஒழுங்கு" பாடத்தில் சித்தி பெறவேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

***8.2 திணைக்களப் பரீட்சைகள்***

(அ) வகுப்பு II "ஆ" பிரிவு மற்றும் "அ" பிரிவைச் சேர்ந்த அலுவலர்களுக்கு உரிய முதலாம் இரண்டாம் திணைக்களப் பரீட்சைகள் அந்தந்த திணைக்களங்களினால் நடாத்தப்பட வேண்டும். தொழில்நுட்பவியல் சேவையின் சில பதவிகளுக்கு உரியதாக தற்போது பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் முதலாம் இரண்டாம் திணைக்களப்பரீட்சைகள் அவ்வாறே நடாத்தப்படும். நிதி ஒழுங்கு மற்றும் தாபன விதிக் கோவையின் கீழான வினாக்கள் திணைக்களப் பரீட்சைகளில் உள்ளடங்கக் கூடாது.

(ஆ) திணைக்களத்தின் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு உரிய விடயங்களுக்கு மேலதிகமாக (அலுவலர் எத் திணைக்களத்தைச் சேர்ந்தவரோ அத் திணைக்களத்திற்கு உரிய) திணைக்கள ஒழுங்குமுறைகள் தொடர்பான வினாக்களும் திணைக்களப் பரீட்சைகளில் உள்ளடங்க வேண்டும். திணைக்களப் பரீட்சைகள் யாவும் எழுத்து மூல அத்துடன் செய்முறை பரீட்சைகள் ஆதல் வேண்டும் என்பதுடன் வாய்மொழிப் பரீட்சைகள் உள்ளடங்கலாகாது. ஒவ்வொரு பாடத்திற்கும் 3 மணித்தியாலங்களுக்கு குறையாத எழுத்திலான வினாத்தாள் ஒன்று வீதம் உள்ளடங்க வேண்டியதுடன் செய்முறைப் பரீட்சைக்கு உரிய கால வரையறைகளை அந்தந்தத் திணைக்களங்கள் தீர்மானிக்க வேண்டும்.

**குறிப்பு :** - மேற்படி திணைக்களப் பரீட்சைகளின் பாடங்களும் பாடவிதானங்களும் உரிய ஆட்சேர்ப்புத் திட்டங்களில் உள்ளடங்க வேண்டும்.

(இ) மேலே 6.3.1 (இ) பந்தியில் விதித்துரைக்கப்பட்டுள்ள தொழில் நுட்பவியல் தகைமைகளில் ஒரு தகைமையை அடைந்திருக்கும் அலுவலர்களுக்கு முதலாம் திணைக்களப் பரீட்சையின் தொழில்நுட்பவியல் பாடத்திலிருந்து விலக்களிக்கப்பட உரித்துண்டு எனினும் அவர்கள் திணைக்கள ஒழுங்குவிதிகள் எனும் பாடத்தில் அலுவலர் எந்தத் திணைக்களத்திற்கு உரியவரோ அத் திணைக்களத்திற்கு உரிய பரீட்சையில் சித்தி பெற வேண்டும்.

(ஈ) சேவையின் வகுப்பு II "அ" பிரிவைச் சேர்ந்த அலுவலர்களைப் போன்று ஐந்தாண்டு சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்து முதலாம் திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள வகுப்பு II "ஆ" பிரிவைச் சேர்ந்த அலுவலர்களும் இரண்டாம் திணைக்களப் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(உ) வகுப்பு I இல் இருந்து விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்காக முகாமை மற்றும் உளச்சார்பு ஆகிய பாடங்களுக்கு உரிய இரு வினாத்தாள்களைக் கொண்ட ஒரு பரீட்சை சபையின் வழிகாட்டலின் கீழ் ஆண்டு தோறும் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும். விசேட வகுப்பிலான வெற்றிடங்களில் 40% நிரப்பப்படுவது மேற்படி பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்று 7.3 (அ) உப பந்தியின் கீழ் அவசியப்படும் மற்றைய தகைமைகளை அடைந்துள்ள அலுவலர்களில் இருந்தாகும். எனினும் 2000 ஆண்டும் அடங்கலாக 2010 பஞ்சாங்க வருட இறுதி வரை வருடாந்தம் விசேட தரத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்ப வேண்டியது பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சதவீதங்களுக்கு உரியதாகும்.

| பஞ்சாங்க வருடம் | விதித்துரைக்கப்பட்ட பரீட்சையில் சித்தியெய்தியதன் பேரில் | சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையின் பேரில் |
|---|---|---|
| 2000 | 20% | 80% |
| 2001 | 22% | 78% |
| 2002 | 24% | 76% |
| 2003 | 26% | 74% |
| 2004 | 28% | 72% |
| 2005 | 30% | 70% |
| 2010 | 40% | 60% |

2010.12.31 திகதிக்குப் பின் முன்நோக்கி பிரமாணத்தின் 7.3 (அ) மற்றும் (ஆ) உப பந்திகளின் மூலம் காட்டப்பட்டுள்ள முறைகளுக்கேற்ப விசேட தரத்தின் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும்.

**குறிப்பு :** - (i) மேல் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பாடங்களும் பாடவிதானமும் "ஆ" அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

(ii) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 27 / 94 மற்றும் 27/ 94 (1) மூலம் மத்திய மட்டத்தின் தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த அலுவலர்களை இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்த சந்தர்ப்பத்தில் மத்திய மட்டத்தின் தொழில்நுட்பச் சேவையின் முதலாம் இரண்டாம் திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடைந்திருக்கின்ற அலுவலர்கள் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் முதலாம் இரண்டாம் திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

9. மேற்போந்த திருத்திய பிரமாணத்திற்கு அமைவாக ஒவ்வொரு பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டங்களை திருத்துவதற்கு திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

10. இப் பிரமாணக் குறிப்பில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பில் செயலாளரால் தீர்மானம் எடுக்கப்படும்.

## அட்டவணை "அ" - வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள்

### வகுப்பு II "ஆ" வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை

இப்பரீட்சை இரு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

1. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (02 மணித்தியாலங்கள்)
2. நிதி ஒழுங்கு விதிகள் (02 மணித்தியாலங்கள்)

### 01 ஆம் இலக்க வினாத்தாளுக்கான பாடத்திட்டம்

அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும்

இவ்வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களின் பேரில் தயாரிக்கப்படும்.

அத்தியாயம் II - சேவைக்கு சேர்த்துக்கொள்ளும் நடைமுறையும் நியமனமும்.

அத்தியாயம் III - இடமாற்றம் செய்தல்.

அத்தியாயம் IV – மாதச்சம்பள, தற்காலிக நிலை : – நிரந்தர நிலை மற்றும் ஓய்வூதிய உரித்து.

அத்தியாயம் V – விடுவித்தல், மீளச் சேவையில் சேர்த்தல், சேவையை முடிவுறுத்தல்.

அத்தியாயம் VII – மேலதிக நேரப்படி, விடுமுறை நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களுக்கான சம்பளங்களும் படிகளும்.

அத்தியாயம் XII – விடுமுறை நாட்கள்.

அத்தியாயம் XIII – புகையிரத அனுமதிப் பத்திரம்.

அத்தியாயம் XIV – நாட்டின் உள்ளான கடமைப் பயணங்கள்.

அத்தியாயம் XIX – அரசாங்க விடுதிகள்.

அத்தியாயம் XLVII – பொது நடத்தையும் ஒழுக்கமும்.

**02 ஆம் இலக்க வினாத்தாளுக்கான பாடத்திட்டம்**

இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளில் பின்வரும் அத்தியாயங்களின் பேரில் தயாரிக்கப்படும்.

01. அத்தியாயம் I

செலவுகள் மற்றும் வருமானங்கள் மதிப்பீடு.
திரட்டிய நிதியம், ஆண்டு மதிப்பீடுகள், ஆண்டு மதிப்பீடுகளில் மாற்றங்களைச் செய்தல்.
(நி.ஒ. 1 முதல் 68 வரை)

02. அத்தியாயம் III

நிதி முகாமையும் பதில் சொல்லும் பொறுப்பும்.
பிரதம கணக்கு அலுவலர்கள், கணக்கு அலுவலர்கள், வருமானக் கணக்கு அலுவலர்கள் கொடுப்பனவுகளுக்காக அதிகாரமளித்தல், அங்கீகரித்தல், சான்றுப்படுத்தல் பணிகளை ஒப்படைத்தல்.
(நி. ஒ. 124 முதல் 147 வரை)

**11. "அ" வகுப்பில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை**

இதற்கான வினாத்தாள்கள் இரண்டாகும்.

1. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (02 மணித்தியாலங்கள்)
2. நிதி ஒழுங்கு விதிகள் (02 மணித்தியாலங்கள்)

**01 ஆம் இலக்க வினாத்தாள்களுக்கான பாடத்திட்டம்**

**அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும்**

இவ்வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களின் பேரில் தயாரிக்கப்படும்.

அத்தியாயம் XV – கல்வி, பயிற்சி அல்லது கடமை தொடர்பான அலுவல்களுக்காக வெளிநாடு செல்லல்.

அத்தியாயம் XVI – விடுமுறைப் பிரயாணங்கள்.

அத்தியாயம் XXIII – சில வகையான நோய்களினால் பீடிக்கப்படும் அரச அலுவலர்களுக்கான விசேட அனுசரனையும் அது பற்றிய நிபந்தனைகளும்.

அத்தியாயம் XXIV – சம்பள கடன்களும் முற்பணங்களும்.

அத்தியாயம் XXV – தொழில் சங்கங்களின் உறுப்பினர்களுக்கான அனுசரணை.

அத்தியாயம் XXVII – கடிதத் தொடர்பு முறைகளைப் பேணும் வழிகள்.

அத்தியாயம் XXVIII – நிர்வாக நடவடிக்கை முறைகளும் விதிகளும்.

அத்தியாயம் XXX - அரச அலுவலர்கள் தொடர்பிலான அரசாங்க அதிகாரங்கள்.

அத்தியாயம் XXXIII - சட்ட மதியுரைகளும் சட்ட செயல் நெறிகளும்.

அத்தியாயம் XLVII - பொது நடத்தையும் ஒழுக்கமும்.

அத்தியாயம் XLVIII - ஒழுக்காற்று நடவடிக்கை முறை.

அலுவலர்களின் செயலாற்றுகை தரங்கணிப்பு பற்றிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள் உரியனவாகும்.

**02 ஆம் இலக்க வினாத்தாளுக்கான பாடத்திட்டம்**

இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளில் பின்வரும் அத்தியாயங்களின் பேரில் தயாரிக்கப்படும்.

01. **அத்தியாயம்** VI

அரச நிதிகளின் பொறுப்பு, கட்டு நிதியும் வங்கிக் கணக்கும், அரச நிதி தொடர்பான கட்டுக்காப்பு, மீளாய்வு சபைகள் மேலதிக பற்று, வங்கிக் கணக்குகள்.
(நி.ஒ 153 முதல் 396 வரை)

02. **அத்தியாயம்** XIII

***வழங்கல்கள், வேலைகளும் சேவைகளும்***
வழங்கல்கள்/கொள்வனவு நடைமுறை, பண்டகசாலை மீளாய்வு, பண்டகசாலை நடைமுறை, ஒப்பந்தங்கள் மற்றும் கேள்வி நடைமுறை.

**1 ஆம் 2 ஆம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் பற்றிய பொது விடயங்கள்**

1. மேற்படி பரீட்சை ஆண்டுதோறும் பரீட்சை திணைக்களத்தால் நடாத்தப்படும்.
2. தகைமை அடைவதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் குறைந்த பட்சம் 40% புள்ளிகளைப் பெறல் வேண்டும்.
3. மேற்குறிப்பிட்டுள்ள பரீட்சைகளுக்கு வெவ்வேறாக தோற்றலாம்.

**அட்டவணை "ஆ"**

**விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை**

இது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்

1. உளச்சார்புப் பரீட்சை - (1 1/2 மணித்தியாலம்)

2. முகாமை - (2 1/2 மணித்தியாலம்)

தகைமை அடைவதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

முகாமை வினாத்தாளுக்கான பாடவிதானம் பின்வருமாறு :

i முகாமைக் கோட்பாடுகள்
ii முகாமைத் தொழில்பாடுகள்
திட்டமிடல்
தீர்மானமெடுத்தல்
தீர்மானமெடுக்கும் செயற்பாடு
அமைப்பு
பதவிநிலை
வழிநடாத்துதல்
நாளாதுவரை செயல்நெறி
தலைமை
நிர்வாகம்
நிர்வாகக் கொள்கைச் செயற்பாடு
iii பங்களிப்பு முகாமை
iv முகாமைச் சுற்றாடல்
v சம்பவக் கற்கை

அட்டவணை “இ”

## இலங்கை தொழில்நுட்பவியல் சேவைக்கான பதவிகள்

| | திணைக்களம் நிறுவனம் | பதவி |
|---|---|---|
| 1. | நீர்ப்பாசனம் | வரைஞர்<br>மன்ற ஆய்வாளர்<br>நீரியல் உதவியாளர்<br>நீரியல் கள உதவியாளர்<br>ஆராய்ச்சி உதவியாளர்<br>ஆராய்ச்சி உதவியாளர் (பொது)<br>துளைத்தல் உதவியாளர்<br>மண் பரிசோதனையாளர்<br>மண் வளப்படம் வரைபவர்<br>பொறிமுறை முகாரி<br>வேலை மேற்பார்வையாளர்<br>படப் பிடிப்பாளர் |
| 2. | வளிமண்டலவியல் | வளிமண்டலவியல் அவதானிப்பாளர்<br>வளிமண்டலவியல் தொடர்பாளர்<br>வரைஞர்<br>தொலைத் தொடர்பு, இரேடார் தொழில்நுட்பவியல், ஆய்வுகூட உதவியாளர் |
| 3. | பெறுமதி மதிப்பீடு | பெறுமதி மதிப்பீட்டுச் சோதனைக்காரர் |
| 4. | கட்டடங்கள் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில், மின்முறை)<br>முகாரி (பொறிமுறை, மின்முறை)<br>வரைஞர் |
| 5. | அரசாங்கத் தொழிற்சாலை | பொறிமுறைக் கண்காணிப்பாளர்<br>வரைஞர் |
| 6. | மோட்டார் போக்குவரத்து | மோட்டார் போக்குவரத்துப் பரீட்சகர்<br>தொழில்நுட்ப உதவியாளர் |
| 7. | நாடு, நகரத் திட்டமிடல் | சோதனைக்காரர்<br>வரைஞர் |
| 8. | சிறைச்சாலை | வேலைச் சோதனைக்காரர்<br>உதவி வேலைச் சோதனைக்காரர் |
| 9. | அளவை | வரைஞர்<br>வான் படப்பிடிப்பாளர்<br>ஒளிவரைவியலர்<br>சேய்மை உணர்தல் தொழில்நுட்பலுவலர்<br>முகாரி<br>கட்டட மேற்பார்வையாளர்<br>வரைஞர் |
| 10. | காணி ஆணையாளர் | குடியேற்ற உத்தியோகத்தர்<br>சிரேஷ்ட வேலைக்கண்காணிப்பாளர்<br>வேலை மேற்பார்வையாளர்<br>வரைஞர் |
| 11. | காணி நிருணயம் | வரைஞர்<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| 12. | கமத்தொழில் | கமத்தொழில் போதனாசிரியர்<br>ஆராய்ச்சி உதவியாளர்<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>போதனாசிரியர்<br>கட்டுவேலை சோதனைக்காரர், கட்டட மேற்பார்வையாளர்<br>வரைஞர்<br>எந்திரவியல் உதவியாளர்<br>எந்திரவியல் முகாரி<br>பண்ணைப் பொறிமுறைப் போதனாசிரியர் |

| | திணைக்களம் நிறுவனம் | பதவி |
|---|---|---|
| | | மண் ஆய்வாளர்<br>காணி மதிப்பீட்டு உத்தியோகத்தர்<br>பண்ணைப் பொறிமுறைப் போதனாசிரியர்<br>தொழில்நுட்ப உதவியாளர் |
| 13. | கமநலச் சேவை | வரைஞர்<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| 14. | ஏற்றுமதிக் கமத் தொழில் | விரிவாக்கல் உத்தியோகத்தர்<br>ஆராய்ச்சி உதவியாளர் |
| 15. | விலங்கு உற்பத்தி சுகாதாரம் | வேலைச் சோதனைகாரர்<br>ஆராய்ச்சி உதவியாளர்<br>வேலைக்கள தொழில்நுட்பலுவலர் |
| 16. | புகைவண்டித் திணைக்களம் | வரைஞர்<br>ஆராய்ச்சி உதவியாளர்<br>புகைவண்டி எத்திரச் சாரதி<br>புகைவண்டிக் காவலர் |
| 17. | தகவல் திணைக்களம் | தொழில்நுட்ப உதவியாளர் |
| 18. | தேசிய நூதனசாலை | பூச்சியியல் உதவியாளர்<br>உதவி மனித வர்த்தகவியலர்<br>விலங்கியல் உதவியாளர்<br>தாவரவியல் உதவியாளர்<br>புவிச்சரிதவியல் உதவியாளர்<br>ஒளிப்படவியலாளர்<br>பேணல் உதவியாளர்<br>காப்பாட்சியாளர்<br>உதவிக் காப்பாட்சியாளர் |
| 19. | தேசிய சுவடிக் கூடம் | தொழில்நுட்ப உதவியாளர்<br>ஒளிப்படவியலாளர்<br>கட்டட பராமரிப்பு உத்தியோகத்தர்<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>உதவித் தொழில்நுட்பவியலாளர் |
| 20. | தேசிய விலங்கு காட்சிச்சாலை | ஆய்வுகூட உதவியாளர்<br>வரைஞர்<br>காப்பாளர் (விலங்கு / ஊர்வன / மீனினம்) |
| 21. | தொல் பொருளியல் | தொழில் நுட்பவியல் உத்தியோகத்தர்<br>(பேணல் உதவியாளர்)<br>வரைஞர்<br>ஒளிப்படவியலாளர் |
| 22. | கடற்றொழில் நீர் வள | எந்திரவியல் உதவியாளர் (கடல்)<br>வேலை மேற்பார்வையாளர்<br>வரைஞர் |
| 23. | நீர் வள அபிவிருத்தி | எந்திரவியல் உதவியாளர் |
| 24. | தேசிய கடற்றொழில் பயிற்சி நிறுவகம் | போதனாசிரியர் (எந்திர வகுப்பு)<br>கடற்றொழில் உபகரணப் போதனாசிரியர் |
| 25. | கரையோரப் பாதுகாப்பு | பிரதான கட்டுவேலைச் சோதனைகள்<br>தொழில்நுட்ப உதவியாளர்<br>நீர்நிலையவியல் அளவையாளர் |
| 26. | காடு பேணல் | வீச்சுக் காட்டு உத்தியோகத்தர்<br>தொழில் நுட்ப உதவியாளர்<br>முகாரி<br>ஆராய்ச்சி உதவியாளர் ஒளிப்படவியலர்<br>வரைஞர் |

| | திணைக்களம் நிறுவனம் | பதவி |
|---|---|---|
| 27. | புடவைக் கைத்தொழில் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| 28. | தொழில்நுட்பக் கல்வி, பயிற்சி | தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>ஆய்வு கூட உதவியாளர்<br>தொழிற்சாலை உதவியாளர் |
| 29. | உள்நாட்டு இறைவரி | முறைமை தொழில்படுத்துனர்<br>முறைமை கட்டுப்பாட்டாளர் |
| 30. | நீதி அமைச்சு | கட்டுவேலைச் சோதனைக்காரர்<br>வரைஞர் |
| 31. | சிவில் வான் செலவு | தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் |
| 32. | இலங்கை வான் படை (சிவில்) | வரைஞர்<br>தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் |
| 33. | இலங்கை கடற் படை (சிவில்) | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கட்டடம்)<br>முகாரி<br>உதவி முகாரி<br>வரைஞர் |
| 34. | இலங்கைத் தரைப்படைத் தலைமையகம் | வரைஞர் |
| 35. | அரசாங்க பகுப்பாய்வாளர் | ஆய்வு கூட உதவியாளர்<br>ஒளிப்படவியலாளர்<br>தொழில்நுட்ப உதவியாளர் |
| 36. | தொழில் | கட்டட மேற்பார்வையாளர்<br>ஆராய்ச்சி உதவியாளர்<br>வரைஞர்<br>கைவிரல் அடையாளங்காண் உத்தியோகத்தர் |
| 37. | பொது நிர்வாக அமைச்சு | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| 38. | கொள்கை திட்டமிடல், செயற்படுத்தல் அமைச்சு | வரைஞர் |
| 39. | கல்வி, உயர் கல்வி, கலாசார அமைச்சு | வடிவமைப்பாளர்<br>வரைஞர்<br>பாடசாலைக் கட்டடச் சோதனைக்காரர்<br>தொழில்நுட்ப உதவியாளர் |
| 40. | தொகை மதிப்பு, புள்ளி விபரம் | வரைஞர் |
| 41. | சுகாதாரம் | மருந்தாளர்<br>பொது சுகாதாரக் கள உதவியாளர்<br>வேலைக்கள முகாரி<br>உடற்குறை மருத்துவ வேலைக்கள தொழில்நுட்பலுவலர்<br>மின்பராமரிப்பு தொழில்நுட்பலுவலர்<br>செவிப்புலனியல் தொழில்நுட்பலுவலர்<br>சினிமா தொழில்நுட்பலுவலர் |
| 42. | மாகாண சபைகள் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்)<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பொறிமுறை)<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்முறை)<br>வரைஞர்<br>பண்ணைப் பொறிமுறைப் போதனாசிரியர்<br>குடியேற்ற உத்தியோகத்தர்<br>பெறுமதி மதிப்பீட்டு உத்தியோகத்தர்<br>சிரேஷ்ட பெறுமதி மதிப்பீட்டு உத்தியோகத்தர்<br>பெறுமதி மதிப்பீட்டு சோதனைக்காரர்<br>ஆய்வுகூட தொழில்நுட்பலுவலர்<br>மருந்தாளர்<br>பொது சுகாதார கள உதவியாளர் |
| 43. | காட்டு உயிரினம் | வரைஞர் |

01 - 240

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.